
ISSN : 2320 - 3412

# தமிழாய்வுச் சங்கமம்

# TAMILAIVU SANGAMAM

Special Issue September - 2017








## தமிழ் இலக்கியங்களில் இறைச்சிந்தனைகள்







வெளியீடு: ISSN 2320-3412

வட்டார மக்களின் சமூக அதிகாரமாக்கல் அறக்கட்டளை

SOCIAL EMPOWERMENT OF LOCAL PEOPLE TRUST

www.selptrust.org

| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1 | அமுதன்.சா | கிறித்தவப் பெண்ணியம்: நிர்மலா சுரேஷ் கவிதைகளை முன்வைத்து | 1 |
| 2 | அமுதா.க | முருகன் வழிபாடும் வெறியாடலும் | 3 |
| 3 | அருள் மைக்கேல் செல்வி.சி | திருவாசகம் என்னும் தேன் | 5 |
| 4 | அஜிதா.நா | அப்பூதி அடிகளாரின் பக்தி நெறி | 8 |
| 5 | ஆண்டனி தமிழரசி. வி | திருக்காவலூர் கலம்பகத்தில் இறைச்சிந்தனை | 10 |
| 6 | ஆரோக்கிய தாஸ். தா | திருவிவிலியம் - யோபு நூலில் இறைச் சிந்தனைகள் | 12 |
| 7 | ஆனந்தி.தி | பாணபத்திரனது இறைபக்தி | 14 |
| 8 | இரம்யா. து | பெரியபுராணத்தில் இறைச்சிந்தனைகள் | 16 |
| 9 | இலக்கியா.சோ | சைவத்திருமுறையும் காரைக்காலம்மையாரின் இறைக்கொள்கையும் | 19 |
| 10 | ஈஸ்வரி. வி. | மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ் காட்டும் இறைச்சிந்தனைகள் | 22 |
| 11 | கணேஷ்வரி. ப | வைதீக சமயத்தில் சமணக்கொள்கை ஊடுருவல் | 25 |
| 12 | கருப்பாயி. பு | திருமூலரின் இறைச்சிந்தனை | 27 |
| 13 | கலை அரசி. சே | கலித்தொகை காட்டும் ஆயர் வாழ்வியலில் காணலாகும் இறைச்சிந்தனைகள் | 29 |
| 14 | கலைமகள் . கோ | பெரியாழ்வாரின் பக்திச் சிறப்பு | 31 |
| 15 | கலைவாணி. ச | திருமங்கையாழ்வாரின் மதுர பாவனை | 33 |
| 16 | கார்த்திகைச்செல்வி. பா | ‘அகல்விளக்கு’ நாவலில் மு.வ. வின் இறைச்சிந்தனைகள் | 36 |
| 17 | குமரகுருபரன்.க | திருநீலநக்க நாயனாரின் இறைநெறி (பெரியபுராணம்) | 38 |
| 18 | கோமதி . க | இயேசுகாவியத்தில் (மலைப்பொழிவு) இறைச்சிந்தனைகள் | 41 |
| 19 | கோவிந்கிருஷ்ணா | முருகவழிபாடு மாற்றமும் உண்மையும் | 43 |
| 20 | சத்யா. க | அழகர் கிள்ளை விடு தூதில் றைச்சிந்தனைகள் | 45 |
| 21 | சந்தனமாரி. பி | பரிபாடலில் திருமால் வழிபாடு | 47 |
| 22 | சந்திரா. யாழ். சு | எட்டுத்தொகை நூல்களில் கடவுள் வாழ்த்தில் இறைச்சிந்தனைகள் | 49 |
| 23 | சற்குணம். லோ | பரிபாடலில் திருமால் அவதாரங்கள் | 51 |
| 24 | சாந்தி. செ | கிறிஸ்தவ சமயப் பிள்ளைத்தமிழ் நூல்களில் இறைச்சிந்தனைகள் | 53 |
| 25 | சாமுண்டீஸ்வரி. போ | இறைச்சிந்தனைகளும் உயிர்த்மெழுதலும் | 55 |
| 26 | சிவகாமி. ச | திருக்குறளில் இறைச்சிந்தனை | 58 |
| 27 | சிவப்பிரியா.க | சுந்தரரின் இறைச்சிந்தனை | 60 |
| 28 | சுருதி.சௌ | வாய்பாடலில் இறைச்சிந்தனை | 62 |
| 29 | சுஜிதா.செ | நம்மாழ்வார் இறைச்சிந்தனை | 65 |

ISSN 2320-3412

# திருவாசகம் என்னும் தேன்

**முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி,**
**உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி (தன்னாட்சி),மதுரை**

## முன்னுரை

உலகத்திற்கு உண்மை ஞானத்தை ஊட்டிய நாடு நம் பாரதநாடு. அதனிலும் உண்மை ஞானம் வளர்ந்து முதிர்ந்து பழுத்த நாடு தமிழ் நாடு. தமிழ் நாட்டில் வாழ்ந்த பண்டைய தமிழ்ப் பெருமக்கள் தாங்கள் வழிபட்டு வந்த முதற்பொருளை இறைவன் என்ற பெயரால் வழங்கி வந்தனர். **'இறைவன்'** என்ற சொல்லிற்கு **'எப்பொருளிலும் தங்குகிறவன்'** என்று பொருள் கூறுவார் அடியார்க்கு நல்லார். மனம், மொழி, மெய்களைக் கடந்து நிற்கும் இறைவனாகிய அப்பரம்பொருளுக்குக் **'கடவுள்'** என்ற பெயரையும் வழங்கினர். இத்தகைய இறைவனை ஓர் உருவத்தில் வைத்து வணங்கி வந்தனர். ஆயிரம் திருநாமங்களைச் சொல்லி அழைக்கப்படும் அவ் இறைவனை, **அரி** என்றும் **அயன்** என்றும் **அரன்** என்றும் போற்றித் துதித்தனர். இதில் எந்நாட்டவர்க்கும் இறைவனாக உள்ள தென்னாடுடையவன் தேன் போலத் தித்திப்பானவன்.

## சைவ சமயம்

சங்க காலத்தில் சைவம், வைணவம் என்ற வேறுபாடுகள் இல்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியம் சிவபெருமானை, ஆலமர் கடவுள், ஆலமர் செல்வன், ஆனேற்றுக் கொடியோன், சூலம் பிடித்த சுடர்ப்படைக் கடவுள், பிறங்கு நீர் சடைக் கரத்தான், மழுவாள் நெடியோன், மலையுறை கடவுள், பிறவா யாக்கைப் பெரியோன் என்றெல்லாம் கூறிப் போற்றுகின்றது. **'நுதல் விழி நாட்டத்து இறையோன்'** என்கிறது மணிமேகலை. அக்காலத்தில் முதன்மையும் தலைமையும் பெற்றிருந்த சைவ சமயத்தின் பெருமைக்கு அதன் கோவில்கள், தெய்வீக நூல்கள், அருளாளர்கள் ஆகிய மூன்றும் சிறந்த காரணங்கள் ஆகும். நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி, தம் தெய்வீகப் பாடல்களால் மக்களிடையே தெய்வ நம்பிக்கையை ஏற்படுத்தினர். சைவ சமய ஆச்சாரியார் நால்வருள் மாணிக்கவாசகர் நான்காமவர் ஆவார்.

## மாணிக்கவாசகர்

**"எழுதருமறைகள்தேறாஇறைவனை எல்லிற் கங்குல்**
**பொழுதறு காலத்தென்றும் பூசனை விடாது**
**செய்து தலைமேலறத்துளும்புகண்ணீருள் மூழ்கி**
**அழுதடியடைந்த அன்பன் அடியவர்க்கடிமை**
**செய்வாம்"**

என்று மாணிக்கவாசகரைப் போற்றுகிறார், பரஞ்சோதி மாமுனிவர். பழம்பதியாகிய பாண்டிநாட்டிலுள்ள மதுரைக்கு அருகே அமைந்துள்ள திருவாதவூரில் அந்தணர் குலத்தில் சம்புபாதாயிருதயர், சிவஞானவதி என்பவருக்கு மகனாகப் பிறந்தவர். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் திருவாதவூரர். அரிமர்த்தன பாண்டியன் இவரைத் தலைமை அமைச்சராக ஆக்கிக் கொண்டான். **'தென்னவன் பிரமராயன்'** என்னும் பட்டமும் அளித்துப் பெருமைப் படுத்தினான். 32 ஆண்டுகள் வரை வாழ்ந்த மாணிக்கவாசகர் இயற்றிய நூல்களுள் ஒன்று திருவாசகம் ஆகும்.

## திருவாசகம்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாவதாக இடம்பெற்றுள்ளது திருவாசகம் ஆகும். திரு + வாசகம் = திருவாசகம். திரு – கண்டாரால் விரும்பப்படும் தன்மை. வாசகம் - சொல். ஈண்டுச் சொல்லால் ஆகிய நூலினை உணர்த்திற்று என்கிறார் ச. சாம்பசிவனார். வாயெல்லாம், மனமெல்லாம், மதியெல்லாம்,மெய்யறிவெல்லாம் தித்திக்கும் திருவாசகம் எனத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூறுகிறார். சிறப்புமிகு திருவாசகத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்த இராமலிங்க அடிகளார்,

**"வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை**
**நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன்கலந்து பால்கலந்து**
**செழுங்கனித் தீஞ்சுவை கலந்துஎன்**
**உயிர்கலந்துஉவட்டாமல்இனிப்பதுவே"**

என்று பாடுகின்றார்.

## நூலின் அமைப்பும் சிறப்பும்

**"செய்யவார் சடைத் தெய்வ சிகாமணி**
**பாதம் போற்றும் வாதவூர் அன்ப**
**பாவெனப் படுவது உன் பாட்டுப்**
**பூ எனப் படுவது பொறிவாழ் பூவே"**

என்று போற்றப்படும் திருவாசகத்தில் சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக 51 பதிகங்கள் உள்ளன. பாட்டு எண்ணிக்கையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. சில பதிப்புகளில் 659 என்றும் சில பதிப்புக்களில் 656 என்றும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. திருவாசகத்தின் சிவபுராணம், கீர்த்தித் திருஅகவல், திரு அண்டப் பகுதி, போற்றித் திருஅகவல் ஆகிய நான்கும் பாயிரம் போன்று அமைந்துள்ளன. **'சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்'** என்பதால் முதல் பாடலின் தலைப்பு அப்பாடலிலேயே குறிப்பிட்டுள்ளதைக் காணமுடிகின்றது.